
# “ இறைச்சி உணவு ” நாம் வணங்கும் “இறைவனுக்கு” சம்மதமா?






வெளியீடு : கருணை சபை - சாலை அறக்கட்டளை
மதுரை-625 107. (பதிவு எண். 4/2009)

- APJ. அருள் -

## எங்களைக் கொல்லாதீர்கள்.
## எங்களையும் வாழவிடுங்கள்.










எல்லா உயிர்களையும்
தம் உயிர் போல் பாவிக்கும் உணர்வை
வருவித்துக்கொள்ளவேண்டும்.

– வள்ளலார்

# முன்னுரை

அன்பர்களே !

உலகில் காணும் எந்தவொரு சமய, மத மார்க்கங்களை நாம் சார்ந்திருந்தாலும், எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவிக்கும் உணர்வை நாம் வருவித்துக்கொள்வது மிக முக்கியமாக அதில் உள்ளது என்பதை, அவரவர் சார்ந்த சமய மத மார்க்கங்களின் புனித நூல் மூலமாக தெரிந்துக்கொள்வதற்காக இந்நூல் வெளியிடப்படுகிறது. நாம் இறைச்சி உண்ணுதல் நாம் வணாங்கும் இறைவனுக்கு சம்மதமா?

நல்ல விசாரணை செய்வோம் வாரீர் !

நம் சமய, மத மார்க்கங்களின் புனித நூல்களை ஒரு தடவை படித்துவிட்டு வைத்து விடுவதில்லை. அப்புனித நூல்களை மீண்டும் மீண்டும் நம்மால் வாசிக்கப்படுகிறது. மற்ற நூல்கள் போல் படித்தோம், தெரிந்து கொண்டோம், என ஏன் அவைகளை விட்டுவிடவில்லை?. மற்ற நூல்கள் போல் அல்ல நம் சமய மத மார்க்கத்தின் புனித நூல்கள். அப்புனித நூல்களின் பொருள் மற்றும் உண்மை, நமது அறிவு மற்றும் ஒழுக்கத்தின் அடிப்படையிலேயே நம்மிடம் வெளிப்படுகிறது. நமது அறிவும் ஒழுக்கமும் விருத்தியாக விருத்தியாக அவையிலிருந்து (புனித நூலிலிருந்து) வெளிப்படும் உண்மையின் அளவும் உயருகிறது அதாவது மேலும் மேலும் புதிய மற்றும் மேன்மையான கருத்துக்கள் வெளிப்படுகிறது என்பதை சத்தியமாக உணருதல் வேண்டும்.

எனவே தான் அந்தந்த சமய மத மார்க்கப் புனித நூல்களை மீண்டும் மீண்டும் நாம் வாசிக்கும்படி அல்லது ஓதும்படி நம் சான்றோர்களால் பணிக்க வைக்கப்பட்டுள்ளோம்.

நாம் நம் சமய மத மார்க்க நூல்களை மீண்டும், மீண்டும் வாசித்து, நம் கருத்தில் ஊன்றி விசாரிக்க வேண்டும்.

வாருங்கள். நல்ல விசாரணை செய்வோம், உண்மையறிவோம், அருள்பெறுவோம்.

அன்பர்களே !

நமக்கு (மனிதனுக்கு) ஏற்படுகின்ற அவத்தைகளான துன்பம், பயம், மூப்பு, பிணி, மரணம் முதலிய அனைத்தும் எல்லா உயிர்களுக்கும் உண்டு. மேற்படி அவத்தைகள் மற்ற உயிர்களுக்கு கிடையாது எனக் கருதுபவர்கள் இந்நூலை மேலும் வாசிக்க வேண்டாம். காரணம் மற்ற உயிர்களும் நம்மைப் போல் உயரினமே என்றும், அவைகள் காயம்படும்பொழுதோ அல்லது வெட்டப்படும்பொழுதோ நமக்கு ஏற்படுவது போலவே வலியும், துன்பமும் அவைகளுக்கும் ஏற்படுகின்றன என்பதை இந்நூலில் நிரூபிக்க முயற்சிக்கவில்லை. நம்மை போல் அவையும் உயிரினமே என அறிந்திருந்தும், உணவு மற்றும் பலவகைக்கு கொல்வது பாவமில்லை எனக் கருதுகின்ற “ஆன்மீகம்” மீது நம்பிக்கை உள்ளவர்களுக்கும், “உண்மை அன்பு” கொண்டவர்களுக்குமே இந்நூல். உணவிற்காக அல்லது மற்ற எந்தொரு காரணத்திற்காகவும் மற்ற உயிர்களை கொல்வதும் மற்றும் அவையின் இறைச்சியை சாப்பிடுவதும் அல்லது பயன்படுத்துவதும் நாம் வணங்குகின்ற நம் சமய மத மார்க்க இறைவனுக்கு, குருவுக்கு சம்மதமா? என்பதே இந்நூலின் மூலமாக விசாரணை செய்ய உள்ளோம். நல்ல எண்ணத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் நன்முயற்சியாக கருத வேண்டுகிறேன். புனித நூல்களில் சொல்லப்பட்ட சத்திய வாக்கியங்களை அப்படியே தரப்பட்டுள்ளது. முடிவு உங்கள் அறிவு ஒழுக்கத்திற்கே விடப்படுகிறது.

தாழ்மையுடன்

– ஏ.பி.ஜெ. அருள்

## திருமந்திரத்தில் தவயோகி "திருமூலர்"



திருமந்திரத்தின் முதல் தந்திரத்தில்
"புலால் மறுத்தல்" பாடல் உள்ளது.

*"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*
*எல்லாரும் காண இயமன் தன் தூதுவர்*
*செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தின்*
*மல்லாக்கத் தள்ளி மறித்துவைப்பாரே"*

புலால் இறைச்சி உணவு. இது உயிருக்குத் துன்பம் தருவது. உடலுக்குத் தீமை விளைவிப்பது. எனவே இதைப் பொல்லால் புலால் என்றார். தீயதான இந்த இறைச்சி உணவை விரும்பி உண்ணும் கீழ் மக்களை எமதூதர்கள் பலரும் காணப்பற்றி இழுத்துக் கொண்டு போய், அவர்கள் உடலைக் கரையான் போல அரித்துக் கொல்லப், பற்றி எரியும் நரக நெருப்பில் மல்லாந்து படுக்கத் தள்ளிப் புரட்டி எடுப்பார்கள்.

மேலும், "கொல்லாமை" பாடலில்

**"மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்...."**

இறைவனின் பூசைக்கு, உகந்த பல மலர்களில் உயர்வான மலர் இன்னொரு உயிரைக் கொல்லாமையாகிய சிறந்த மலர் மாலையே ஆகும் - என்கிறார்.

மேலும், எல்லா உயிர்களிலும் ஈசன் இருக்கிறான் என்ற உண்மை உணர்ந்து, எல்லா உயிர்களிடமும் அன்பும் இரக்கமும் கொண்டு மகிழ்ந்திருப்பவர்க்கே "இறையருள்" கிட்டும்.

*"கொலையே களவுகள் காமம் பொய்கூறல்*
*மலைவான பாதகமாம் அவை நீக்கித்*
*தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு*
*இலையாம் இவைஞானா னந்தத்து இருத்தலே."*

உயிர்கொலை, திருட்டு, பெண்இச்சை, பொய் பேசுதல், கள் உண்ணுதல் ஆகிய ஐந்தும் மிகப் பெரும் பாவங்கள், தீச்செயல்களாகும். இந்தத் தீச்செயல்களை விட்டொழித்துத் தலைவனாம் சிவபெருமான் திருவடித்துணைநாடி இன்புற்று இருப்பவர்களுக்கு வேறுவகைத் துன்பங்கள் இல்லை.

ஆக, *அன்பே சிவம்.*



## திருக்குறளில் தெய்வப்புலவர் "திருவள்ளுவர்"

### புலால் மறுத்தல்

**ஒன்றைக் கொன்று உடலைத் தின்னாமை**

*"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்."*

**விளக்கம் :-**

தன் உடலை வளர்த்துக்கொள்ள எவ்வளவோ பொருள்கள் இருந்தும், உயிரைத் துடிக்க துடிக்கக் கொன்று, அதன் உடலை உண்பவன், அருள் உணர்வுடன் வாழ முடியாது.

*"பொருள்ஆட்சி போற்றார்க்கு இல்லை; அருள் ஆட்சி*
*ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு".*

**விளக்கம் :-**

பாதுகாத்து வைத்தால்தான் பொருளால் அடைய வேண்டிய நன்மைகளை எல்லாம் அடைந்து பிறப்பின் பலனை அடையமுடியும். ஒன்றன் உடலைத் திண்பது செய்யத் தகாத செயலென்று அதிலிருந்து ஒதுங்கி எல்லா உயிரையும் தன் உயிர்போல நினைத்து வாழ்வதுதான் அருளால் உடையும் நன்மையாகும்.

*"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்*
*உடல்சுவை உண்டார் மனம்".*

**விளக்கம் :-**

கொலைக் கருவியைக் கையில் வைத்துக்கொண்டு நடமாடுவோரின் உள்ளத்தில் ஓர் உயிரைக்கொல்வது பாவம் என்னும் உணர்வு எப்படி இருக்காதோ, அதுபோல ஒன்றன் உடலைத் தின்று சுவைகண்டவர் நெஞ்சில் எல்லா உயிர்களுக்கும் நன்மைசெய்ய வேண்டும் என்ற அருளுணர்வு இருக்காது.

*"அருள்அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்,*
*பொருள்அல்லது அவ்வூன் தினல்."*

**விளக்கம் :-**

எந்த உயிரையும் கொல்லாமல் இரக்கம் காட்டுவது அருள்வாழ்க்கை. கொல்வது பாவம் என்பதை உணராத வாழ்க்கை பாவ வாழ்க்கை. அதுவும் உடல்தான் என்பதை உணராமல் தின்பது தன் உடலைத் தானே தின்னும் ஈன வாழ்க்கை ஆகும்.

*"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண*
*அண்ணாத்தல் செய்யாது அளறு."*

**விளக்கம்:-**

ஒன்றன் உடலைத் தின்பதனால் வரும் பாவ விளைவுகளில் இருந்து தப்பவே முடியாது என்பதை உணர்ந்து பலர் அதைத் தின்னாமல் இருப்பதால்தான் இன்னும் பல உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

*"தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்."*

**விளக்கம் :-**

தின்பதற்காக ஓர் உயிரைக் கொல்லாத வழக்கம் உலகத்தில் இருந்தால், ஒன்றைக்கொன்று அதன் உடலைப் பொருளுக்காக விற்றுப்பிழைக்கும் கொடிய செயலும் உலகத்தில் இருக்காது.

*"உண்ணாமை வேண்டும் புலாஅல், பிறிதுஒன்றன்*
*புண்அது உணர்வார்ப் பெறின்."*

**விளக்கம்:-**

தன் புண்ணை எப்படி தானே சுவைப்பது இல்லையோ, அதுபோலப் புலாலையும் பிற உடம்பின் புண்ணென்று உணர்கின்ற அறிவுடையவர்கள் அதை ஒதுக்கிடுவார்கள் என்பது உண்மையாகும்.

*"செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்*
*உயிரின் தலைப்பிரிந்த ஊன்."*

**விளக்கம் :-**

துன்பத்தில் இருந்து விலகி வாழும் அறிவுடையவர்கள் உயிரில்லாத எந்த உடலையும் பிணம் என்று உணர்வதால் அதைத் தின்னாமல் வெறுத்து ஒதுக்கி விடுவார்கள்.

*"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று."*

**விளக்கம் :-**

மேலான நல்ல பலன்களை அடையலாமென்று, புனிதமாக நினைக்கப்படுகின்ற யாகத்தைக் குடகுடமாக நெய்யை ஊற்றிச் செய்வதைவிட எந்த உயிரையும் கொல்லாத அருள் வாழ்வில் நல்ல பலன்களை அடையலாம்.

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்."*

**விளக்கம் :-**

எந்த உயிரையும் கொல்லாமலும், புலாலை உண்பது பாவச்செயல் என்று அதைத் தின்னாமலும் வாழ்வதை எவன் தவவாழ்க்கையாக மதிக்கின்றானோ, அவனைத் தெய்வநிலையில் வைத்து எல்லோரும் வணங்குவார்கள்.

எனவே **புலால் உண்பது பாவமே**



**பரிசுத்த வேதாகமம்**
**"தேவன் கர்த்தர் / இயேசுபிரான்"**

ஆதியாகமம்; அதிகாரம்-1, **Para 20, 21, 24 & 25.**

தேவன் வானத்தையும் அதில் வெளிச்சம் மற்றும் அனைத்தையும் படைத்தான்.

"தேவன் அது நல்லது" என்று கண்டார்

Para (26) - பின்பு தேவன் நமது சாயலாகவும் நம் ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின், மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியில் ஊரும்

சகப்பிராணிகளையும் "**ஆளக்கடவர்கள்**" என்றார்.

Para (29) பின்னும் தேவன், இதோ பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும் விதை தரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சகங்களையும் உங்களுக்கு கொடுத்தேன். அவைகள் உங்களுக்கு "**ஆகாரமாயிருக்கக்கடவது**".

**இங்கு கவனிக்க ;**

தேவன் கால்நடைகளை, பறவைகளை, நீரில் வாழ்பவனவற்றை மனிதர்கள் (உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்) "ஆளக்கடவர்கள்" என்றுதான் கட்டளையிட்டார்கள் அவைகளை "ஆகாரமாக்கி கொள்ளுங்கள்" என்று இல்லை என்பதை நாம் அறிந்திட வேண்டும்.

தேவனாகிய கர்த்தரின் கட்டளையை மீறி ஆதாம் மற்றும் ஏவாள் தடுக்கப்பட்ட விருட்சகத்தின் கனியை புசிப்பதற்கு முன்

**அதிகாரம்** (2) **Para 16 & 17 :-**

.... நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சகத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். நன்மை தீமை அறியதக்க விருட்சகத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் எனக் கட்டளையிட்டார்.

தடுக்கப்பட்ட அந்த ஒரு விருட்சகத்தின் கனியை புசித்த பின்பு தேவன் ஆதாமை நோக்கி :-

..... விலக்கின விருட்சகத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோட அதின் பலனைப் புசிப்பாய். தேவன் கர்த்தரால் படைக்கப்பட்ட முதல் மனிதன் "ஆதாம்" கர்த்தரின் கட்டளையை மீறியதால் தீமையை அறிந்தான். பாவங்கள் செய்யத் தொடங்கி விட்டான். சாகாநிலையும் அவனை விட்டுச் சென்றது. **"புலால் உண்பது" சபிக்கப்பட்டதே என்று அறியவேண்டும்.**

ஆதாமுக்கு பின்பு நோவாவுக்கோ, கார்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது அதி 7 (Para 8) ஜலப்பிரளம் ஏற்படுத்தியதால் பூமியில் இருந்தவையெல்லாம் மாண்டன. தேவன் கட்டளைபடி பேழையில் இருந்த நோவா வெளியே வந்தவுடன் கர்த்தருக்கு “பலிபீடம்” அமைத்து தகனபலிகளாக சிலவற்றை பலியிட்டார்.

உடன் கர்த்தர் :- “மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல் இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை” என்று கூறுகின்றார்கள். (அதிகாரம் 8 (Para 21)

சகரியா அதிகாரம் 11 Para 4 & 5

என் தேவனாகிய கர்த்தர் சொல்கிறது என்னவென்றால் கொலையுன்கிற ஆடுகளை மேய்க்ககடவாய். அவைகளை உடையவர்கள், அவைகளை கொன்றுபோட்டுத் தங்களுக்கு குற்றமில்லையென்று எண்ணுகிறார்கள். அவைகளை விற்கிறவர்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாங்கள் ஐசுவரியமுள்ளவர்களானோம் என்கிறார்கள், அவைகளை மேய்க்கிறவர்கள், **அவைகள் மேல் இரக்கம் வைக்கிறதில்லை.**

அதன்பின்பு, தேவனுடைய குமாரர் **இயேசு** அவதரித்து ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிக்கிறார். தேவகுமாரர் மக்களை நோக்கி “மனந்திரும்புகள், பரலோகத்ராஜ்யம் சமீபித்திருக்கிறது” என்கிறார்கள். தேவன் இயேசு என்றால் “நமக்கு விடுதலைத் தருபவர்” என்பதாகும்.

**ரோமர் 14 : 21 :**

***மாம்சம் புசிக்கிறதும்***, மதுபானம் பண்ணுகிறதும், உன் சகோதரன் இடதுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிப்பதே நன்மையாகும்.

நீதிமொழிகள் 23ம் அதிகாரம் Para 20

*“மதுபானப்பிரியரையும்* **மாம்சப் பெருந்தீனிக்காரரையும்** *சேராதே*“ - சாலொமோன்.

**I** யோவான் **Para 24 & 25**

ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும், பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம்.

இங்கு, மனிதனுக்கு மற்ற ஜீவராசிகள் அனைத்தையும் படைத்து “ஆளக்கடவர்கள்” என்பதையும் பலவகை விருட்சகங்களை பற்பல பூண்டுகளையும், கனிகளையும் படைத்து “ஆகாரமாக்கிக் கொள்ளுங்கள்” என்பதை நினைவுகூறுங்கள்.

**II** பேதுரு அதிகாரம் **1 Para 6**

ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் மற்றும் ..... சகோதர சிநேகத்தோட அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

(மத்தேயு 5ல் இயேசு பிரான் உபதேசித்து சொன்னவைகளை ஊன்றிப்படிக்க வேண்டும். உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன).

**Para 7 :-** **“***இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்***“**

**I** யோவான் 2 **Para** 16

“**மாம்சத்தின் இச்சையும்**, கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் **பிதாவினாலுண்டானவைகளல்ல**, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்”

**I** யோவான் 2 **Para 17**

*உலகமும் அதின்* **இச்சையும்** *ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றைக்கும் நிலைத்திருப்பான்.*

**எனவே தேவனுடைய விரும்பம் - கட்டளை “உலக இச்சை“ யை ஒழிப்பதே.** 1 கொரி 8 : 13

“ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு” இடறலுண்டாக்காதபடிக்கு, **என்றைக்கும் மாமிசம் புசியாதிருப்பேன்**”

அன்புக்கு உரியவர்களே !

ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் நம்பெயரும் இடம்பெற “ஜீவகாருண்யத்தை” கடைப்பிடித்து பரிசுத்த நகரத்தில் பிரவேசிப்போம். அங்கு நமக்காக ஜீவவிருட்சகத்தின் கனிகளும் ஆரோக்கியத்திற்கு விருட்சகத்தின் இலைகளும் மட்டுமே இருக்கின்றன என்பதை அறிந்திடுவோம்.

ஜீவ புஸ்தகத்தில்

“**கொலை பாதகர்கள்**, பொய்யர்கள் போன்றவர்களின் பெயர்கள் எழுதப்படமாட்டாது”

வெளி அதிகாரம் 4 **Para 6-8 :-**

.... சகலத்தையும் சிருஷ்டித்த, கர்த்தரின் சிங்காசனத்திற்கு மத்தியிலும், சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. அவைகள் சிங்கத்திற்கொப்பாகவும், காளைக்கொப்பாகவும், மனுஷமுகம் போன்றும், பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவும் இருந்தது. **ஜீவன்கள் என்றால் அனைத்து உயிர்களுமே என்பது இதன் மூலம் புலனாகிறது. எனவே கொல்லாமை - அனைத்து ஜீவனை கொல்லாமையே ஆகும்.**

மேலும்,

“திருச்சபைச் சட்டத்தில்” இறையருள் வேண்டி உபவாசம் இருந்து சுத்த போசனம் உண்ண வேண்டும் என்கிறது (தி.ச.ச.1249)

“உபவாசம் திருநீற்றுப்புதன், பெரிய வெள்ளி மற்றும் தவக்கால எல்லா வெள்ளிக் கிழமைகளும் மேற்க்கொள்ள வேண்டும்” என்கிறது.

**இந்நாள்களில் "சைவ உணவை" மட்டுமே உண்டு, மீன், முட்டை, இறைச்சி போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்கிறது சட்டம்.**

**தேவனை நினைத்து "உபவாசம்" மேற்கொள்ளும் போது "மாம்ச இச்சை" இன்றி சுத்த போசனம் உண்ண வேண்டும் என்கிறது சட்டம்.**

**அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு கொண்டால்** நம் துணையாளர் தூய ஆவியானவர் தன் ஆற்றலால் நம்முள் குடிகொண்டு தந்தையோடும், மகனோடும் நம்மை இணைப்பார். உறுதியாக நம்புவோம்.



## பௌத்துவம்-"புத்த மகான்"

துக்கத்திற்குக் காரணம் கோரிக்கையே. அது எந்த கோரிக்கையாகவும் இருக்கலாம். புலன்களும் விருப்பமான விசயங்களும், காரியங்களும், அவற்றின் தொடர்பும், எண்ணமும் கோரிக்கையைத் தோற்றுவிக்கின்றன. தன் ரூசியின் மீது விருப்பம் கொண்டு பிறர் உயிரை கொல்கின்றனர். இந்த துக்கத்தின் அழிவுக்கு வழியாக "ஞானம்" பகுதியில் கூறுகிறார் புத்தமகான்.

*கொலை செய்தல் தீச்செயல்*
*கொல்லாமையே நற்செயல்*
*இறைச்சி வியாபாரம், அதை வாங்குதல்*
*"பொய்யான வாழ்க்கை முறை"*
*உண்மையான வாழ்க்கை முறையினால்*
*உடலை வளர்க்க வேண்டும்.*



## “ஜைன தர்மம்”
## நூல் அருங்கலச்செப்பு

*“பெரிய கொலைபொய் களவோடு காமம்*
*பொருளை வரைதலோடு ஐந்து”*

கொல்லாமை, பொய்மை, திருடாமை, காமமின்மை, மிகுபொருள் விரும்பாமை என ஐந்தும் அனுவிரதமாகும்.

*“இயங்குயிர் கொல்லாமை ஏவாமை ஆகும்*
*பெருங்கொலையின் மீட்சி எனல்“*

இருபொறி உயிர் முதலான இடம் விட்டு இடம் பெயரும் உயிர்களைத் தானும் கொல்லாது பிறரை கொண்டும் கொல்லாது இருத்தல் பெருங்கொலை தியாகம் எனும் அகிம்சை அனுவிரதமாகும்.

*“அறுத்தல் அலைத்தல் அடைத்தலோடு ஆர்த்தல்*
*இறப்பப் பொறை இறப்போர் ஐந்து“*

உறுப்புகளை அறுத்தல், தடி முதலானவற்றால் துன்புறுத்தல், அடைத்துவைத்தல், பிணைத்து வைத்தல், அதிக சுமை ஏற்றுதல் இவை ஐந்தும் கொல்லாமை விரதத்திற்கு அதிகாரம் ஆகும். **புலால் உண்பது தவறே.**



## திருமறை திருக்குர்ஆன்
## இறைத்தூதர் - “நபிகள் நாயகம் (ஸல்)”

**அத்தியாயம் 6 Para 152**

“வறுமைக்காக (பயந்து) உங்களுடைய குழந்தைகளைக் கொன்றும் விடாதீர்கள்.”

**அத்தியாயம் 4 - 29**

“ ....... உங்களிடையே ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள். உங்களுக்குள் (சண்டையிட்டு) வெட்டிக் கொள்ளவும் வேண்டாம்”

**அத்தியாயம் 17 - 31**

வறுமைக்கு பயந்து, உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள். நாமே அவர்களுக்கும், உங்களுக்கும் உணவளிக்கிறோம். நிச்சயமாக அவர்களை கொலை செய்தல் பெருங்குற்றமாகும்.

**நிற்க :-**

அன்றைய காலக்கட்டம் மனிதன் மனிதனிடத்திலேயே கூட இரக்கம் காட்ட முடியாத அளவு வறுமையான காலம்.

**அத்தியாயம்** 23-21-ல் "நிச்சயமாக", (ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய) கால்நடைகளில் உங்களுக்கு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிறுகளில் உள்ளவற்றிலிருந்து உங்களுக்கு (பாலை) **நாம் புகட்டுகிறோம்.** இன்னும் உங்களுக்கு அவற்றின் மூலம் பல பலன்களும் இருக்கின்றன. இன்னும், அவற்றிலிருந்து (மாமிசத்தையும்) **நீங்கள் உண்ணுகிறீர்கள்.**

**அத்தியாயம் 20 - 53 & 54**

...... பூமியில் பலவகையான புற்பூண்டுகளிலிருந்து, பற்பல வகையானதை நாம் வெளியாக்கினோம். நீங்களும் உண்ணுங்கள்; உங்கள் கால்நடைகளையும் மேயவிடுங்கள், நிச்சயமாக இதில் அறிவுடையோருக்கு பல அத்தாட்சிகள் உள்ளன".

**அத்தியாயம் 2 - 22**

"(உங்கள் ரப்பு) அவன் பூமியை உங்களுக்கு விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் அமைத்தவன். மேலும் வானிலிருந்து மழையை பெய்யச் செய்து, அதன் மூலம் பல வகையான கனிகளிலிருந்து உங்களுக்கு **உணவை வெளிப்படுத்தினான்.**"

**அத்தியாயம் 2:35-36**

ஆதமே! நீரும், உன் மனைவியும் இச்சுவனபதியில் குடியிருங்கள்; மேலும், அதிலிருந்து தாராளமாக விரும்பிய இடங்களில் நீங்கள் இருவரும் உண்ணுங்கள்; நீங்கள் இருவரும்

இம்மரத்தை நெருங்க வேண்டாம்; (நெருங்கினால்) அப்பொழுது நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களில் உள்ளவர்களாக ஆகிவிடுவீர்கள்.

ஷைத்தான், அவர்கள் இருவரையும் அதிலிருந்து தவறச் செய்து, அவர்களிருவரும் இருந்த நிலையைவிட்டு அவ்விருவரையும் வெளியேற்றிவிட்டான்; ''இன்னும் உங்களில் சிலர் சிலருக்குப் பகைவராயிருக்கும் நிலையில், நீங்கள் (இங்கிருந்து) இறங்குங்கள்.''

(எனவே தான் இந்த பூமியில் ஒருவருக்கொருவர் பகைவராகவும், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு, இரக்கம் காட்ட முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டது என அறிகிறோம்.)

**அத்தியாயம் 2:25**

இன்னும், இவ்வேதத்தின் மீது நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்வோருக்கு, அதன் கீழ்ப்பகுதியில் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் சுவனச் சோலைகள் நிச்சயம் அவர்களுக்கு உண்டு என்று நீர் நற்செய்தி கூறுவீராக ! அவற்றிலிருந்து அவர்களுக்கு கனிவர்க்கத்திலிருந்து உணவாக வழங்கப்படும் போதெல்லாம், "இது எத்தகையதென்றால் இதற்கு முன் நமக்கு உணவாக வழங்கப்பட்டதே தான்'' என்று கூறுவார்கள்.

**அத்தியாயம் 2 - 155**

(முஃமின்களே !) அச்சம், பசி, பொருள்கள், உயிர்கள் கனிவர்க்கங்கள் முதலியவற்றில் நஷ்டத்தைக் கொண்டு உங்களைத் திண்ணமாக நாம் சோதிப்போம். (நபியே) பொறுமையாளர்க்கு (சுவனத்தைக் கொண்டு) நீர் நன்மாராயம் கூறுவீராக !

இறைவனால் தொடக்கத்திலே வானவருக்கும் முதல் மனிதன் ஆதாம் அவரின் மனைவிக்கும் சரி ; மேலும் பின்னாளில் இந்த பூமியில் புண்ணியம் செய்யும் தொழக்கூடியவர்கள்,

ஏழைகளுக்கு உணவளித்தவர்கள், மற்றும் அல்லாஹ் மீது நம்பிக்கைவைத்தவர்களுக்கும் அமைக்கப்பட்ட *சுவனத்திலும்* சரி மிகத் துாய்மையான பானங்களும் கனிகளுமே இருந்தது, இருக்கின்றன, இருக்கும் என்பதை உணர்ந்திடுவோமாக.

**<u>நூல் அபூதாவூத்</u>** -ல்

“வாயில்லா கால்நடைகளின் விஷயத்தில் இறைவனுக்கு அஞ்சுங்கள் அவற்றை நல்ல நிலையிலையே விட்டு வையுங்கள்”

**<u>திர்மதி</u> -ல்**

“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விலங்குகளின் முதுகில் அடிப்பதையும் முகத்தில் சூடு இடுவதையும் தடுத்தார்கள்” மேலும்,

*“நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விலங்குகளை*
*ஒன்றொடென்று சண்டை போட விடுவதைத் தடுத்தார்கள்“*

“தவறான நடத்தையுடைய பெண் ஒருவள் ஒரு நாயைக் கண்டாள் அந்த நாய்க்கு தாகம் அதிகரித்து, நாக்கு வறண்டு, ஒரு கிணற்றை சுற்றி வந்து கொண்டேயிருந்தது. உடனே அவள் தனது காலுறைகளை ஒரு துணியில் கட்டி கிணற்றில் விட்டு தண்ணீர் எடுத்து அந்த நாய்க்குப் புகட்டினாள்” இதன் காரணமாக “இறைவன்” அவளை மன்னித்தார்.

இங்கு, ஜீவனாகிய “நாய்க்கு” தண்ணீர் கொடுத்து இரக்கம் கொண்டதால், அவள் “பாவம்” விலக்கி அந்தப் பெண்ணை இறைவன் மன்னித்தார் என்பதை அறிவோம்.

**<u>நூல்</u>- <u>முஅத்தாவில்</u> : “இறைச்சியை திண்பதைப் பற்றி உங்களை நான் எச்சரிக்கிறேன்**. ஏனென்றால் நிச்சயமாக அதனை வழக்கமாக திண்பது, மதுபானம் அருந்துவதை வழக்கமாக்கி கொள்வது போன்றதாகும். அதெல்லாமல் **நிச்சயமாக வழக்கமாக (தினமும்) இறைச்சியை திண்ணும் குடும்பத்தார் மீது இறைவன் கோபம் அடைகிறான்**”.

**திருக்குர் ஆன் 10 : 44**

*"மனிதர்கள் தமக்குதாமே அநீதி*
*இழைத்துக் கொள்கின்றார்கள்."*

**அத்தியாயம் 89 - 27 -ல்**

சொல்லப்பட்டுள்ள ஆன்மாவின் நிலைகளில் முதல் நிலையான "நஃப்ஸ் முத்ம இன்னா" (அமைதியடைந்த ஆத்மா) நிலையை அடைய முயற்ச்சிப்போம். "அல்லாஹ்" என்றும் துணையிருப்பார்.

**அத்தியாயம் 5:95**

முஃமின்களே ! நீங்கள் இஹ்ராம் அணிந்தவர்களய் இருக்கும் நிலையில் வேட்டைப் பிராணிகளைக் கொல்லாதீர்கள்; உங்களில் எவரேனும் வேண்டுமென்றே அதனைக் கொன்றால், (ஆடு, மாடு, ஒட்டகம்) பிராணிகளிலிருந்து அவர் கொன்றதைப் போன்றது தண்டனையாகும்.

**அத்தியாயம் 6:14,38**

.............. அவன் அனைவருக்கும் உணவளிக்கிறான்; (ஆனால் பிறரால்) அவன் உணவளிக்கப்படுவதில்லை.

பூமியிலுள்ள எந்த பிராணியும், தன் இரு இறக்கைகளால் பறக்கின்ற எந்தப் பறவையும் **உங்களைப் போன்ற இனமேயன்றி (வேறு) இல்லை**; எப்பொருளையும் பதிவேட்டில் விட்டுவிடவில்லை.

**அத்தியாயம் 22:37**

குர்பானீ பிராணிகளாகிய அவற்றின் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ **ஒருக்காலும் அல்லாஹ்வை அடைவதில்லை**; என்றாலும், உங்களிலுள்ள தக்வா தான் அவனை அடையும் ........

**அத்தியாயம் 79:40,41**

எவர் தம்முடைய ரப்பின் சந்நிதானத்தை பயந்து, **மனோ இச்சையை விட்டும்** தம் ஆன்மாவைத் தடுத்துக் கொண்டாரோ - நிச்சயமாக சொர்க்கம் - அதுதான் அவருடைய தங்குமிடமாகும்.

**அத்தியாயம் 81:24-32**

எனவே, மனிதன் தன் உணவின்பால் கவனித்துப் பார்க்கட்டும். நிச்சயமாக நாமே நீரைப் பொழிவதாகப் பொழியச் செய்தோம். பிறகு பூமியைப் பிளப்பதாகப் பிளக்கச் செய்தோம். பின்னர் அதில் தானியத்தை முளையச் செய்தோம். திராட்சையையும், காய்கறிகளையும், ஓலிவ மரத்தையும், பேரீச்சையையும் மரங்கள் அடர்ந்த தோட்டங்களையும், பழத்தையும் தீவனத்தையும் உங்களுக்கும், உங்கள் கால்நடைகளுக்கும் சுகமளிக்கும் பொருளாக இவற்றை விளையச் செய்தோம்.

**அத்தியாயம் 16:6-8, 10, 11, 66**

இன்னும் நீங்கள் கால்நடைகளை மாலையில் ஓட்டி வரும்போதும், காலையில் அவிழ்த்து விடும் போதும் அவற்றில் உங்களுக்கு அழகு இருக்கிறது. இன்னும் சிரமமின்றி எதனை நீங்கள் சென்றடைய முடியாதோ அத்தகைய ஊர்களின் பக்கம் உங்களுடைய சுமைகளை அவை சுமந்து செல்கின்றன; நிச்சயமாக **உங்களுடைய ரப்பு மிக்க இரக்கமுள்ளவன்; மிகக் கிருபையுடையவன் -**

அவன் எத்தகையவனென்றால், வானத்திலிருந்து உங்களுக்காக தண்ணீரை இறக்கி வைத்தான்; அதிலிருந்து குடிப்பும் உண்டு; இன்னும் அதிலிருந்து புற்பூண்டுகளும் உண்டாகின்றன; அதில் நீங்கள் கால்நடைகளை மேய்க்கிறீர்கள்.

அதன் மூலம் பயிர்களையும், ஜைத்தூனையும், பேரீச்ச மரங்களையும், திராட்சைக் கொடிகளையும் இன்னும் எல்லாக் கனிகளிலிருந்தும் உங்களுக்காக அவன் முளையச் செய்கிறான்; நிச்சயமாக அதில் சிந்திக்கும் கூட்டத்தினருக்கு அத்தாட்சி இருக்கிறது.

**நிச்சயமாக உங்களுக்குக் கால்நடைகளில் படிப்பினை இருக்கிறது;**

**அத்தியாயம் 16:69**

**பிறகு எல்லாக் கனி (மலர்) வகைகளிலிருந்தும் நீ உணவருந்தி உன்னுடைய ரப்பின் எளிதான வழிகளில் நீ புகுந்து செல்வாயாக! (என்றும் உள்ளுணர்வை ஏற்படுத்தினான்).......**

அல்லாஹ் அருளிய திருவேதத்தின் தெளிவான விளக்கம் உறுதியான ஆதாரத்துடன் நன்மை தீமை பிரிதறிந்து பேரொளியாகவும் மெய்யாகவும் கன்னியமாகவும் தெளிவுடன் ஞானத்துடன் நேர்வழி காட்டி அருள் செய்து அருமருந்தாக இறக்கி வைக்கப்பட்டது என அறியலாம்.

*“எல்லா புகழும் (அல்லாஹ்) இறைவனுக்கே“*



## பகவத் கீதையில் கடவுள் “கிருஷ்ணர்”

‘அவிதி’:- பல்வேறான தெய்வங்களை வழிபடுவது பூரண சத்தியத்தை வழிபடுவதாகாது. மாமிச உணவை விரும்புவர்கள் அபூர்வமான சில குறிப்பிட்ட சந்தர்பங்களில் மட்டும் அதை உண்ண அனுமதிக்கப்படுகிறார்கள். இது மாமிச உணவை உட்கொள்வதை ஆதரிக்கிறது என்பதல்ல..

‘ப்ரஹ்மபூத நிலை’ :- வாழ்வின் ஐந்து நிலைகளில் ஐந்தாவது மேல் நிலையான ‘ஆனந்தமயநிலை’யில் கவலைகளோ, இச்சைகளோ இருப்பதில்லையென்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் எல்லா உயிர்வாழிகளையும் சமமாகக் காணும் போது ஏற்படுகிறது. இந்நிலையிலேயே (மட்டுமே) முழுமதற்கடவுளை ‘கிருஷ்ணர்’ரை காணமுடியும். **அனைத்து உயிர்களிடத்திலும் ஜீவ இரக்கம் கொண்டாலன்றி இறைவனைக் காணமுடியாது.**

‘மத்பக்திம் லபதே பராம்’ :- பரத்துக்கும் அதற்கு கீழ்ப்படிந்த **உயிர்வாழிகளுக்குமிடையே (எல்லா உயிர் வாழிகளிடத்திலும்)** அன்புப் பரிமாற்றம் ஏற்படும் போதுதான் பரம் பொருளின் தன்மையோடு ஒன்றாயிருப்பதை உணரமுடியும். இந்த

நிலை அடையாதவன் விடும் மூச்சு கொல்லன் உலைத் துருத்தி காற்றை இழுத்து வெளிவிடுவது போலவும் அவனின் வாழ்வுக்காலம் ஒரு மரத்தினைப் போன்றாகவும் இருக்கும். அவன் கீழ் நிலை மிருகங்களான ஒட்டகம், நாய், பன்றி இவற்றைவிட இன்னும் கீழானவனே!

*பாவச் செயல்கள் எனப்படுவன :-*

முறையற்ற பாலுறவு, மது அருந்துதல், **மாமிசம் உண்ணுதல் மற்றும் சூதாட்டம் ஆகிய நான்கு பாவச் செயல்கள் நடைபெறும் இடங்கள் தாமச குணத்தின் பாற்பட்டவை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.** பகவான் விஷ்ணு எல்லா உயிர்வாழிகளின் இதயங்களிலும் வீற்றிருக்கிறார். மிகவும் இழிவான பிராணிகளின் இதயங்களிலும் பகவான் வீற்றியிருக்கிறார். அவர் எங்கு இருந்தாலும் அந்த இடம் வைகுண்டமாக மாறுகிறது.

மாமிசம் உண்பது பாவச் செயலே - பகவான் நாராயணன்

## சமரச சுத்த சன்மார்க்கம்
## "திருஅருட் பிரகாச வள்ளலார்"

*"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி*
*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"*
- திருமந்திரம்

*"ஜீவகாருண்யமே இறைவழிப்பாட்டின் திறவுகோல்"*

ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் கடவுள் அருளைப் பெறக்கூடுமல்லது, வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்று உறுதியாக அறிதல் வேண்டும்.

அருளென்பது - கடவுள் தயவு, கடவுள் இயற்கை விளக்கம், ஜீகாருணியமென்பது - ஜீவர்கள் தயவு, ஜீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவைக் கொண்டு தயவைப்

பெறுதலும் விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங்கூடும். வேறொன்றினால் பெறக்கூடாமை அனுபவமாகலின், ஜீவகாருணியத்தைக் கொண்டு அருளைப் பெறுதல் கூடும். வேறொன்றினாலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென்று அறிய வேண்டும்.

அருளைப் பெறுவதற்கு ஜீவகாணியமே வழி யாதலால், ஞான வழி என்பதும் சன்மார்க்கம் என்பதும், ஜீவகாருணிய ஒழுக்கம் என்றும் - அஞ்ஞான வழி என்பதும் துன்மார்க்கம் என்பதும் ஜீவகாருணிய ஒழுக்கமில்லாமையென்றும் அறியப்படும்.

ஜீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளக்கும்; அதனால் உபகாரசக்தி விளங்கும். உபகார சக்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும்.

ஜீவகாருணியம் மறையும்போது அறிவும் அன்பும் உடனாக மறையும் - அதனால் உபகார சக்தி மறையும் - உபகார சக்தி மறையவே எல்லாத் தீமைகளும் தோன்றும்.

ஆதலின், புண்ணியமென்பது - ஜீவகாருணியம் ஒன்றேயென்றும், பாவமென்பது - ஜீவகாருணியமில்லாமை யொன்றே யென்றும் அறியப்படும்.

ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும்; - ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும்; - இவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்துப் பூர்த்தியடைந்த சாத்தியர்களே ஜீவன் முத்தரென்றும், - அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள்மயம் ஆவார்கள் என்றும் சத்தியமாக அறிய வேண்டும். ***ஜீவகாருணிய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச் சிறுதும் பாத்திரமாகார்கள்.***

ஜீவகாருணியவொழுக்கம் உடையவர்களாகிய ஜீவர்களைப் பசியென்கின்ற அபாயத்தில் நின்றும் நீங்கச் செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜாதியாராயினும், எந்த

சமயத்தாராயினும் எந்த செய்கையை உடையவர்களாயினும், தேவர், முனிவர் சித்தர் யோகர் முதலிய யாவராலும் வணங்கத் தக்க சிறப்புடையர் ஆவார்களென்று சர்வ சக்தியையுடைய கடவுள் சாட்சியாக சத்தியம் செய்யப்படுமென்று அறிய வேண்டும்.

**"ஒழுக்கம்" என்பவைகள்**

| | |
|---|---|
| ☞ நல்லறிவு | ☞ உயிரிரக்கம் |
| ☞ கடவுள் | ☞ பொது நோக்கம் |
| ☞ பக்தி | ☞ திரிகரண அடக்கம் |

**நிற்க :**

இன்றைய காலக்கட்டங்களில் இறையருளை வேண்டி பல மத சமயங்களில் ஈடுபட்டு ஒழுக்கங்களில் நன்முயற்ச்சிகளில் பலர் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் அனைத்து ஜீவரிடத்தில் இரக்கமின்றி இருத்தலை காண்கின்றோம். அல்லது ஜீவ காருண்யங்களில் ஒன்றான "புலால் உண்ணாமை" என்ற அடிப்படைத்தகுதியினை மட்டுமே பெற்றிருந்து, ஒழுக்கங்களில் ஒழுகாமல் வீண் காலம் கழிப்பவர்களையுமே காண்கிறோம். பெருமான் கூற்றுப்படி, ஜீவகாருண்யம் மற்றும் ஒழுக்கம் இரண்டையுமே பெற்று, ஒழுகி இறையருளை பெறக்கூடுமெயன்றி வேறு எந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்று உறுதியாக அறிதல் வேண்டும்.ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்றறிய வேண்டும்.

ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் - துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதாயினும் - கேட்ட போதாயினும் - இவ்வாறு உண்டாகும் என்று அறிந்த போதாயினும் – ஆன்ம உருக்கம் உண்டாகும் என்று அறியவேண்டும்.

ஜீவகாருணியம் இல்லாதபோது, அருள் விளக்கம் தோன்றாது அது தோன்றாதபோது, கடவுள் நிலை கைகூடாது.

அது கூடாத போது முத்தியின்பம் ஒருவரும் அடையமாட்டார்கள். அடையாத பட்சத்தில், பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறிய வேண்டும்.

ஜீவகாருண்யம் கடவுளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதனமென்பதுமல்லாமல், அதுவே அந்த அருளின் ஏகதேச விளக்கமென்றும் அறிய வேண்டும். ஜீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கம் ஆதலால், அந்த இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது. எல்லாம் வல்ல இயற்கை உண்மை கடவுளாகிய எல்லாமுடைய இயற்கை விளக்கக் கடவுளாகிய எல்லாமாகிய இயற்கையின்பக் கடவுளாகிய மற்றும் மதம், சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர், அடியார், யோகி, ஞானியாவர்களாலும் தாங்கள் தங்கள் அனுபவங்களை குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமை பெரும்பதியாகிய "**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே**" உன் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி, எக்காலத்து மழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும் என்கிறார் திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்கள்.

இத்தேகத்தை பெற்ற எல்லா சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும், உரிமையுடைவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

*தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு*
*வந்தனம் ! வந்தனம் !!*
*அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை*
*இறைவீட்டிற்கு ஜீவகாருண்யமே திறவுகோல்*

- இராமலிங்கம் (வள்ளலார்).

## மகான் சத்குருநானக் (சீக்கிய மதம்)

உண்மையும் மனநிறைவும் உள்ளத்தில் இரக்கமும் உடையவரே சீக்கியர். சீக்கியர் என்பவர் யாருக்கும் தீமை இழைக்காமல் இருக்க வேண்டும்; ஆசைகளுக்கும் ஐம்புலன்களுக்கும் அடிமையாகாமல் இருக்க வேண்டும். இரக்கம், உண்மை ஆகியவைகளே நல்வாழ்வைத் தரும்.

## தத்துவ ஞானி ஓஷோ

விலங்குகள் நம் சகோதரர்கள் ஏனென்றால் நாம் அவற்றிலிருந்து உருவானவர்கள், நாம் எல்லோரும் ஒரே குடும்பத்தினர் ஒரு பிராணியைக் கொல்வதென்பது ஆன்மீக வளர்ச்சி குன்றிய ஒரு மனிதனைக் கொல்வதற்குச் சமமாகும் !

## ஸ்ரீ பிரம்மர்ஷி பத்ரிஜி

உலக அமைதிக்கும் சமாதானத்திற்கும்
சைவ உணவையே மேற்கொள்ள வேண்டும்

-



## சத்திய சோதனை "மகாத்மா காந்தியடிகள்"

சைவ உணவில் நான் கொண்ட நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. உணவு சம்பந்தமான ஆராய்ச்சி நூல்களைப் படிக்க வேண்டும் என்ற பசியை, சால்ட்டின் புத்தகம் எனக்கு உண்டாக்கிற்று சைவ உணவைப்பற்றிக் கிடைத்த புத்தகங்களையெல்லாம் வாங்கிப் படித்தேன் ஹோவார்டு வில்லியம்ஸ் எழுதியிருந்து 'உணவு முறையின் தருமம்' (The Ethics of Diet) என்ற நூல், ஆதிகாலத்திலிருந்து இன்றைய வரையில் மனிதரின் உணவு வகையைப் பற்றி எழுதப் பெற்ற எல்லாப் புத்தகங்களின் வரலாற்றுச் சரித்திரத்தையும் கூறுகிறது. பித்தகோரஸ், ஏசுநாதரிலிருந்து தற்காலத்தில் வாழ்கிறவர்கள் வரை, எல்லாத் தத்துவஞானிகளும், தீர்க்கதரிசிகளும் சைவ உணவு

உட்கொள்ளுபவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவும் இந்த நூல் முயன்றிருக்கிறது. டாக்டர் அன்னா கிங்க்ஸ் போர்டு எழுதிய 'உணவு முறையில் சரியான வழி (The Perfect Way in Diet)' என்ற நூலும் கவர்ச்சிகரமானது. தேகாரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் குறித்து டாக்டர் அலின்சன் எழுதியிருந்தவையும் அதே போல உதவியாக இருந்தன. நோயாளியின் ஆகாரத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலமே நோயைக் குணமாக்கும் முறையை அந்த நூலில் அவர் எடுத்துக் கூறியிருந்தார். அவர் சைவ உணவு மாத்திரமே சாப்பிடுகிறவர். ஆகையால், தம்மிடம் வரும் நோயாளிகளுக்கும் கண்டிப்பான சைவ உணவு யோசனையைச் சொல்லி வந்தார். இந்த நூல்களையெல்லாம் படித்ததன் பலனாக, உணவாராய்ச்சி செய்வதும் என் வாழ்க்கையில் முக்கியமான இடம் பெற்றுவிட்டது. ஆரம்பத்தில் தேகசுகத்தை முக்கியமாகக் கருதியே பெரும்பாலும் இந்தச் சோதனைகளைச் செய்து வந்தேன். ஆனால், பிறகோ சமயப்பற்று, இச்சோதனைகளுக்குப் பிரதானமான நோக்கமாயிற்று.

தியாகம், எளிமை என்ற லட்சியங்கள் என் அன்றாட வாழ்க்கையில் மேலும் மேலும் அதிகமாக நிறைவேறி வந்தன. சமய உணர்ச்சியும் மேலும் மேலும் துரிதமாக எனக்கு ஏற்பட்டு வந்தது. அதே சமயம், சைவ உணவுக் கொள்கையைப் பரப்ப வேண்டுமென்ற ஆர்வமும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

ஒரு கொள்கையைச் சரியானபடி பரப்ப வேண்டுமானால், அதற்கு எனக்குத் தெரிந்தது ஒரே ஒரு வழிதான். அந்தக் கொள்கையை நானே கடைபிடித்துக் காட்டுவதும், அறிவை வளர்த்துக்கொள்ள ஆராய்ச்சி செய்பவர்களுடன் விவாதிப்பதுமே அந்த வழி.

நம் இந்திய திருநாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகள் கூற்று "**இறைச்சி இறைவனுக்கு சம்மதமில்லை என்பதே**" என்பதை அறிந்திட்டோம்.

## உங்களுக்கு தெரியுமா ?

- **நமது நாட்டின் முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர். ஆ.பெ.ஜெ. அப்துல் கலாம் சைவ உணவு மட்டுமே உட்கொள்பவர் ஆவார்கள்.**
- அசோகர், ஷேக்ஸ்பியர், அரவிந்தர், மொரஜீதேசாய் போன்ற மதிப்பிற்குரியவர்கள் அனைவருமே சைவ உணவு மட்டுமே உட்கொள்பவர்கள்.
- பற்களின் அமைப்பானது, தாவரங்களை மட்டுமே சாப்பிடும் பழக்கம் உள்ளவைகளுக்கும் மாமிசம் சாப்பிடுபவை களுக்கும் வேறுபாடுடன் காணப்படுகிறது. மனிதர்களின் பற்கள், சைவம் சாப்பிடுவதற்கான அமைப்பில்தான் காணப்படுகிறது.
- பற்களில் மட்டுமில்லாமல் செரிமானம் மற்றும் உடல் உட்கூறுகளின் அமைப்பிலும் மாறுபாடு காணப்படுகிறது.
- பல நோய்களுக்கும், நோய் பரவுவதற்கும் "புலால் உண்பதே" காரணமாக உள்ளது.

### வெளிநாட்டு அறிஞர்களின் கருத்துக்கள்

1. Animal diet is not essential to man. **- Lord Playfair, M.D.**
2. It is a vulgar error to regard meat eating in any form as necessary to life. I know how much of the prevailing meat diet is not merely a wasteful extra vagance but a source of serious evil to the consumer.

   **- Sir Henry Thompson, M., D., F.R.C.S. (Britain)**
3. Prohibition and vegetarianism go together. Meat is a poorer food. It does not contain the elements necessary to the human body. Meat is the greatest generator of diseases. From my experience I say that it is very difficult to cure alchoholic people if you allow them to eat meat.

   **- Jean Nussbom (France)**
4. Beef eating and bowel cancer fit. Reduction in mortaility from interstinal cancer could be achieved by a change of diet.

   **- Dr. Gordon Latto, London.**
5. Meat eating will increase blood pressure, lead to diseases such as tuberculosis and cancer and promote chances of heart attack. Meat contains food poisoning microbes.

   **- Raymond H. Woossey, U.S.A**



# இந்திய அரசமைப்புச் சட்டத்தில் “பரிவு”

- இராமலெட்சுமி இளங்கோ, எம்.ஏ.,
நிறுவநர் : கருணை சபை-சாலை

இந்திய அரசமைப்பு சட்டம் உறுப்பு எண் 51 (A) இந்திய குடிமக்களுக்குரிய அடிப்படை கடமைகள் பத்தில் ஏழாவது கடமையாக 51 (A) (g) உள்ளது யாதெனில்;

“காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வேண்டும், தவிர உயிரினங்களிடம் பரிவு காட்டிடல் வேண்டும்”.

மேற்படி கடமையில் இரண்டாவதாக உள்ளது; **“உயிரினங்களிடம் பரிவு காட்டிடல் வேண்டும்”.**

இந்நிலையில், அரசு செலவில் நடைபெறும் அரசு விழா மற்றும் துறை சார்ந்த கூட்டங்களில் சைவ வகை உணவுகளே இடம் பெற வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குடிமக்களுக்கு அறிவுறுத்தப்பட்ட ‘உயிரினங்களிடம் பரிவு காட்டிடல் வேண்டும்‘ என்பதை முதலில் அரசாங்கமும் மற்றும் இந்திய அரசமைப்பு சட்ட உறுப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ள அனைத்து நிர்வாகங்களும் கவனத்தில் கொண்டு, அரசமைப்பு சட்ட சரத்துக்களை மதித்து நடந்து, இந்திய குடிமக்களுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும்.

பொதுப்பணத்தில் நடைபெறும் அரசு விழாக்கள் மற்றும் துறைசார்ந்த கூட்டங்களில் ‘அசைவ உணவு’ பரிமாறப்படுவதை உடனே நிறுத்தவேண்டும்.

பள்ளி, கல்லூரி பாடப்புத்தகங்களில் அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ள ‘எல்லா உயிரினங்களிடம் பரிவு காட்டிடல் வேண்டும்‘ என்ற ‘தயவுநெறி‘ குறித்து கல்வி ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேதகு அரசு மற்றும் அரசமைப்பு நிர்வாகத்திற்கு வைக்கும் எனது இந்த கோரிக்கையானது உண்மை இரக்கத்தின் அடிப்படையிலும், இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு அடிப்படையிலும் வைக்கப்படும் கோரிக்கையாகும். எந்தொருவரின் தனிப்பட்ட உரிமைக்கு எதிரானது அல்ல.

இந்திய குடிமக்களே !

நமது இந்திய அரசமைப்புச் சட்டம் 51 (A) (a)-ல் உள்ள படி நாம் கடமையாக கொள்ளவேண்டியது யாதெனில்;

**அரசமைப்பைப் பின்பற்றுதல். மேலும், அதன் கருத்துகளை மதிக்க வேண்டும்.**

கடந்த 4 வருடங்களாக போராட்டங்கள், வழக்குகள் மூலம் இக்கோரிக்கையினை வலியுறுத்தி வருகிறேன். அனைவரும் இக்கோரிக்கைக்கு ஆதரவு அளித்திட வேண்டும்.

## "ஒன் கீரின் பிளானட்" புள்ளி விபரம்.

நம் பயன்பாட்டிற்காக கால்நடைகளின் இனப்பெருக்கங்கள் இயற்கைக்கு முரணாக பல லட்சக்கணக்கில் கருத்தரிக்க வைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. அவ்வாறு வளர்க்கப்படும் கால்நடைகளின் உணவுக்காக செய்யப்படும் வேளாண்மைக்கு இன்று அழிக்கப்படும் அமேசான் காட்டில் 70 சதவீதம் இதற்காகவே பயன்படுத்தப்படுகிறது

கால்நடை பண்ணையால் கிரீன்ஹவுஸ் வாயுக்களில் 18 சதவீதம் மற்றும் 64 சதவீதம் அந்தோரோபிரோ ஜெனிக் அமோனியா வெளிப்பாட்டினால் சொல்ல முடியாத அளவுக்கு சுற்று சுழலில் மாசு ஏற்படுத்துகிறது மற்றும் 8 சதவீதம் உலக மனிதனுக்கான நீர் வளத்தில் இவ்விலங்குகளின் உணவு பயிர் பாசனத்திற்கு செலவழிக்கப்படுகிறது. மேலும், விலங்குகளின் கழிவுகளால் நன்னீர் வளங்கள் பெரியளவில் மாசுப்படுகின்றன என்கிறது புள்ளிவிபரம்.

## முடிவுரை :

இங்கு ஒன்றை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் அஃது; எங்களின் புனித நூல்களில் இறைச்சி உணவு சாப்பிடலாம் என்பதற்கு போதிய வாக்கியங்கள் உள்ளன எனக்கருதுபவர்களும் உண்டு.

அது உண்மையே. ஆனால் அது அப்படியல்ல

அன்பர்களே !

ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கு இரு பாதைகள் இருக்கின்றன. மேற்படி இரு பாதையின் மூலமும் அந்த குறிப்பிட்ட இடத்தை அடைய வழியுள்ளது. மேற்படி இரு பாதைகளின் தொடக்கத்தில் ஒரு வயதான, அனுபவசாலியான முதியவர் அமர்ந்து இருக்கிறார். மேற்படி குறிப்பிட்ட இடத்தை அடைய அங்கு வந்துள்ள சிலரிடம் அப்பெரியவர் கீழ்வருமாறு சொல்கிறார்கள்;

‘‘அன்புக்குரியவர்களே ! நான் சொல்வதை கேட்க வேண்டுகிறேன். இடதுபுறம் செல்கின்ற பாதை வேண்டாம் அது கரடுமுரடான பாதை. பள்ளமும் இருட்டும் நிறைந்த ஒன்று. வலதுபுறம் செல்லும்பாதையே சரி. அதில் நீங்கள் பயணித்தால் நீங்கள் செல்ல விரும்பும் இடத்தை சௌகரியமாகவும், விரைவாகவும் அடையலாம் என்கிறார்’’ அப்பெரியவர்.

ஆனால் அப்பெரியவரின் பேச்சை கேட்காமல் அப்பெரியவரால் தடுக்கப்பட்ட இடதுபுறப் பாதையில் பயணிக்க முடிவு செய்தார்கள் அவர்கள். அப்பொழுது அப்பெரியவர் அவர்களிடம், நீங்கள் இடதுபுற பாதையில் செல்ல தீர்மானித்து விட்டீர்கள். இதோ நான் தருபவையாவது பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். இருட்டான பகுதியை கடக்கும்பொழுது இந்த விளக்கும், பள்ளம் மேடு பகுதியைக் கடக்கும்போது இந்த கம்பும், கயிறும் உங்களுக்கு தேவைப்படும் எனவே இவற்றையாவது பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் பெரியவர்.

அன்பர்களே !

பெரியவரின் கருணையை பாருங்கள். தன் சொல்லை கேட்க மறுத்தவர்களிடமும் தயவை காட்டும்செயலே அவர்தம் உண்மை கருணை ஆகும்.

ஆனால், இச்செயலை தூரத்திலிருந்து பார்த்தவர்கள் பெரியவரைப் பற்றி கீழ்வருமாறு தீர்மானிக்கிறார்கள். அஃது; ''வந்தவர்களை மேற்படி இடதுபுற பாதையில் பயணிக்க சொன்னவர் பெரியவரே என்றும் அப்பாதையிலேயே செல்லுமாறு சொல்லி தேவைப்படும் உபகரணங்களையும் கொடுத்து அனுப்பிவைத்தது அப்பெரியவரே'' என்கிறார்கள். ஆனால் அதுவா உண்மை?

சொல்லை மீறி நடப்பவர்களிடமும் கருணை காட்டியதே உண்மை. ஜீவஇரக்கம் வேண்டும் என பல இடத்தில் நம் புனித நூல்களில் உள்ளது. ஆனாலும் அவைப்பற்றி கருத்தில் கொள்ளாமல் இறைச்சி சாப்பிடுபவர்களிடம், கருணை காட்டும் வகையில் இறைச்சியினால் ஏற்படுகின்ற உபாதைப்பகுதி மற்றும் உபாதையற்ற பகுதி எனப்பிரித்து தரப்பட்டுள்ளது என அறிக.

*அன்புக்குரியவர்களே!*

ஒழுக்கங்களான உண்மை உரைத்தல், உண்மையிரக்கம், கள் உண்ணாமை, தன்னை மதியாதிருத்தல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல் மற்றும் பலவகையான இந்திரிய, கரண ஒழுக்கங்கள் இறைவனின் திருவருளை பெறுவதற்கு தேவையாக இருந்தாலும் ஜீவகாருண்யமான ஜீவயிரக்கமே / கொல்லாமையே ஆன்மிகத்தில் பற்றுள்ளவர்களுக்கு அடிப்படை ஒழுக்கமாக உள்ளது என்பதை உணர்ந்திடுவோமாக. அதே நேரத்தில் "புலால் உண்ணாமை", "கொல்லாமை" இவையே போதுமானதாக கருதுவதும், மற்ற ஒழுக்கங்களில் ஒழுகாமல் இருந்தாலும் இறைவனின் அருளை பெறவே முடியாது என்பதும் உண்மையே.

"ஜீவகாருண்யமே இறைவீட்டின் திறவுகோல்" என வள்ளலார் சத்தியமாக கூறுகிறார். ஒரு பெரிய கட்டிடத்திற்கு அஸ்திவாரம் எவ்வாறு மிக முக்கியமானதோ அதே போன்றே அனைத்து ஒழுக்கங்களுமான கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போன்றிருப்பது "ஜீவகாருண்யமே" - "கொல்லாமையே" என்பதை உணர்ந்திடவேண்டும்.

ஒழுக்கங்களில் பலவற்றில் சிறந்து விளங்கும் பலரை நாம் சமுதாயத்தில் காண்கிறோம். பக்தியில் நம்பிக்கையுடன் அவர்கள் ஈடுபடுவதையும் காண்கிறோம். அந்த வகையான சிறப்பானவர்களும் திரிபுநிலை கொள்ளாது கடவுள்நிலை காணவும், கடவுளின் திருவருளை முழுமையாக, பெற்றிட வேணுமாய் விருப்பம் கொண்டே இந்த நல்ல விசாரணையை செய்து கொண்டோமே அன்றி எவரையும் தாழ்த்தியோ உயர்த்திடவோ இல்லை என்பதை தாழ்மையுடன் கூற கடமைப்பட்டுள்ளோம். இறைவன் உலகை படைத்து ஆதியில் மனிதனுக்கு உணவாக (ஆகாரமாக) படைத்தது பலவகையான விருட்சகங்கள், புற்பூண்டுகள், கனிகள் என்பதை அறிந்திட்ட நாம் சுவர்க்கத்திலும் சைவ உணவு வகைகளே உள்ளது எனவும் அறிந்திடுக.

சாதி, மதம், சமயம், இன வேறுபாடு இல்லாமல், எல்லாம் வல்ல, எல்லோருக்குமான அந்த ஒரே இறைவனாகிய அவன் திருவருளை முழுமையாக அனைவரும் பெற்றிடவேண்டும் என்ற விருப்பத்தின் விளைவே இந்த சிறு விண்ணப்பம். இக்கட்டுரையை எழுதிட உதவிய திருமூலர் திருமந்திரம், திருக்குறள், பௌத்தத் தத்துவ இயல், பரிசுத்த வேதாகமம், திருக்குர்-ஆன், அருங்கலச் செப்பு மற்றும் திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய ஜீவகாருணிய ஒழுக்கம் ஆகிய புனித நூல்களை மதித்து சிரம் தாழ்த்தி வணங்கிறேன்.

எல்லாம் வல்ல ஆண்டவனின் அருளை எல்லோரும்
பெற்றிட விண்ணப்பிக்கின்றேன்.


தயா நேயத்துடன்

தங்கள் அன்புள்ள

- **APJ. ARUL**

karunaisabaisalaitrust@gmail.com, www.atruegod.org

www.vallalarspace.com / karunaisabaisalai



*எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே*
*எல்லாம்வல் லான்தனையே ஏத்து.*

* * * * *

*அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே*
*அன்பெனும் குடில்புகும் அரசே*
*அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே*
*அன்பெனும் கரத்தமர் அமுதே*
*அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே*
*அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே*
*அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே*
*அன்புருவாம் பரசிவமே !*

* * * * *

*ஓ நித்திய குருவே! எங்கள் பாவங்களை பொறுத்தருளும்*
*நரக நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றும்*
*எல்லா ஆத்துமங்களையும்*
*விசேஷமாய் உம் இரக்கம் யார் யாருக்கு தேவையோ*
*அவர்களையும் மோட்சத்தில் சேர்த்தருளும். ஆமென்.*

* * * * *

*அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும்*
*உடையவன் இறைவன்*
*"எல்லா புகழும் இறைவனுக்கே"*


* * * * *


*ஆருயிர்கட்கெல்லாம் நாம் அன்புசெயல் வேண்டும்*
*எல்லா உலகமும் வாழ்க*
*எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க*

* * * * *


**சிந்தனை செய் மனமே .... - APJ. அருள்**

*சத்து நிறைந்த பாலை*
*தந்து காக்கும் ஆடு, மாட்டினை*
*கத்த கத்த அதனையே*
*நாமும் கொன்று தின்னலாகுமோ !*






*கூவி நம்மை எழுப்பிவிடும்*
*கோழி நல்ல பறவையாம்*
*ஆவி போக அதனையே*
*நாமும் அறுத்து தின்னலாகுமோ !*



*தாகம் தீர்க்கும் தண்ணீரில்*
*தங்கியிருக்கும் அழுக்கினை*
*போக வைக்கும் மீன்களையே*
*நாமும் பிடித்து தின்னலாகுமோ !*



*போதும் பாவம் என்றே சொல்லி*
*புனித சைவம் கொள்வோமே !*

‘‘இறைச்சி உணவு நாம் வணங்கும்
இறைவனுக்கு சம்மதமில்லை’’

**- APJ. ARUL**

ஜீவகாருண்யமே இறைவீட்டின் திறவுகோல்.

**- வள்ளலார்**